**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.132/2024**

**நாள் : 02.06.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இந்திரா | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு. சங்கர் | வயது | : | 39 |
| ஊர் | : | கொடுமாம்பள்ளி | தொழில் | : | |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை**

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. விபத்து பதிவேடு நகல்– ம.சா.ஆ.2

3. TN 29 CT 1733 என்ற லாரி வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல்– ம.சா.ஆ.3

4. கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல் – ம.சா.ஆ.4

5. திருப்பத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய காயச் சான்றிதழ் நகல் – ம.சா.ஆ.5

6. TN 29 CT 1733 என்ற லாரி வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.6

7. TN 29 CT 1733 என்ற லாரி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் – ம.சா.ஆ.7

8. TN 29 CT 1733 என்ற லாரி வாகனத்தின் பதிவு புத்தகம் நகல்– ம.சா.ஆ.8

9. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – மா.சா.ஆ.9

10. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.10

11. 30.04.2024 ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல்– ம.சா.ஆ.11

12. அசல் மருத்துவபில்கள் (எண்ணிக்கை –16) ரூ.12,665/– ம.சா.ஆ.12

13. இருசக்கர வாகன ஓட்டுநர் சக்திவேலின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.13

14. கார் வாடகை ரசீதுகள் (எண்ணிக்கை–3) ரூ.12,000/ – ம.சா.ஆ.14

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தின் போது இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றேன். அந்த வாகனத்தை சக்திவேல் என்பவர் ஓட்டிச்சென்றார். அவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்ட உரிமம் இல்லை என்றால் உள்ளது. அந்த ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காமல் திடீரென சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. விபத்து ஏற்பட்டவுடன் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை எடுத்துக்கொண்டு மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். ரூ.3,00,000/– செலவானதற்கான மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். ரூ.12,600/– க்கான மருத்துவ ரசீதுகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேல் சிகிச்சைக்காக தற்போது ரூ.2,00,000/– தேவை உள்ளது என்று மருத்துவ சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமாகிவிட்டதால் மேல் சிகிச்சை ஏதும் தேவைப்படவில்லை என்றும், அதனால் நான் கோரியுள்ள மேல் சிகிச்சை செலவுகள் வழங்க முடியாது

என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமடைந்துவிட்டதால் எவ்வித ஊனமும் இல்லை என்றால் இடது பக்கத்தில் அறுவைசிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர் பரிந்துரைத்துள்ளனர். பரிந்துரை கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு முழுமையாக குணம் அடைந்து விட்டது நான் வழக்கிற்கான பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள தொகை மிக மிக அதிகம் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த ஆறு காலத்திற்குள் இந்த மனுவை தாக்கல் செய்யாததால் இந்த மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.